பெறுவேன்" என்றார் தன்னம்பிக்கையுடன்.

பென்னாகரம், ஏரியூர் அருகே பா.ம.க.வின் கோட்டையாக சில ஊர்கள் உள்ளன. 15 ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் ராமதாஸ் மீது கொண்ட அதீத பாசத்தால் அந்தப் பகுதி மக்கள் தங்கள் ஊரின் பெயரையே 'டாக்டர் ராமதாஸ் நகர்' என்று வைத்திருக்கின்றனர். அந்த ஊரில் வேறு எந்தக் கட்சிக்காரர்களும் கொடியேற்ற அனுமதிப்பதில்லை. அதனால், 'பா.ம.க. கொடிக் கம்பத்தைத் தவிர வேறு எந்தக் கொடிக் கம்பமும் நடுவதற்கு அனுமதியில்லை' என்று கட்டுப்பாடு விதிக்கும் அளவுக்கு வெறிகொண்ட விசுவாசிகள் ராமதாஸ் நகரில் உள்ளனர்.

அதேசமயம், தற்போது நிலவி வரும் கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தால் அந்தக் கோட்டையிலும் ஓட்டை விழுந்துள்ளது. பல ஆண்டுகளாக கவனிப்பாரற்றுக் கிடந்த அந்தப் பகுதி மக்களிடம் தி.மு.க. தேர்தல் பிரிவுச் செயலாளர் டி.எம். செல்வகணபதி ஆதரவாகப் பேச, ராமதாஸ் நகர், ஈச்சம்பாடி ஆகிய பகுதிகளில் உள்ள 650 பேரில் 250 பேர் பா.ம.க. கிளைச் செயலாளர் சரவணன் தலைமையில் தி.மு.க.வில் இணைந்துள்ளனர். அதைத் தொடர்ந்து ராமதாஸ் நகரில் தி.மு.க. கொடி பட்டொளி வீசி பறக்கிறது. தற்போது 'ஜாதியைக் காட்டிக் கொடுத்து விட்டாயேடா?' என்று பா.ம.க.வினர் சரவணனிடம் மல்லுக்கு நிற்க, அடிதடியாகி போலீஸில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் நமது காதுக்கு வர, ராமதாஸ் நகரில் ஆஜராகி அங்கிருந்த பொது மக்களிடம் விசாரித்தோம்.

"எங்க ஊரில் இதுக்கு முன்னால பா.ம.க.வைத் தவிர வேற எந்தக் கட்சியும் இருந்ததில்லை. தலை விரிச்சாடும் தண்ணிப் பஞ்சத்தைத் தீர்க்க 15 வருசமா எந்த கட்சியும் நடவடிக்கை எடுக்கவில்லை. பல பேர் ஊரைக் காலி பண்ணிட்டு வெளியூருக்கு வேலைக்குப் போய்ட்டாங்க. அந்த நிலையில்தான் மீசை வச்ச தி.மு.க.காரரு (டி.எம்.செல்வகணபதி) எங்க ஊருக்கு வந்து ரெண்டு போரிங் பைப் போட்டுக் கொடுத்தாரு. குடிக்க அந்த நீர் போதும். நாங்க துணி துவைக்க இங்கிருந்து 6 கிலோ மீட்டரில் காவிரி கரையில் உள்ள நாமரை கிராமத்துக்குத்தான் செல்ல வேண்டும். அதனால இந்தத் தேர்தலில் யார் எங்களுக்கு உதவி செஞ்சாங்களோ அவுங்களுக்கு ஆதரவாகத்தான் முடிவெடுப்போம்' என்றனர்.

நாம் அங்கிருந்த சரவணனிடம் பேச்சுக் கொடுத்தோம். அவர், "'டாக்டரை ரொம்பப் பிடிச்சி போனதால இந்த ஊருக்கே அவர் பேரை வச்சோம். ஆனா 10 வருஷம் அந்தக் கட்சியைச் சேர்ந்தவங்க எம்.எல்.ஏ.வா இருந்த போது இங்க எட்டிக் கூட பார்க்கவில்லை. எங்க ஊரை இணைக்கும் பாலம், ஒத்தயடி பாதை போல கட்டப்பட்டது. அதில் எந்த வாகனமும் போய் வர முடியாது. இதை ஒன்றிய செயலாளர் எல்.ஐ.சி. மந்திரியிடம் கூறினோம். அவரு 'அப்படித்தான் போடுவோம்' என்று திமிராகக் கூறினார். ஒரு கால கட்டத்தில் நாங்க 250 பேர் தி.மு.க.வுக்கு மாறிவிட்டோம். அதன்பிறகு முதன் முதலில் ராமதாஸ் நகரில் தி.மு.க. கொடி ஏற்றப்பட்டது. நேற்று ஆசைதம்பி உள்ளிட்ட சிலர், 'நீ வன்னியனே கிடையாது. ஜாதி மாறிப் போய்விட்டாய்' என்று என்னைத் தாக்கினார்கள். பின்னர் போலீஸில் பெட்டிஷன் கொடுத்தேன். அவர்கள் ஆசைத்தம்பி மீது வழக்கு பதிவு செய்யாமல் டம்மியாக சில பேர் மீது வழக்கு பதிவு செய்து, என் மீதும் வழக்கு பதிவு செய்துவிட்டனர்" என்று வருத்தப்பட்டார்.



காவேரி வர்மன்



சரவணன்

நாம் ஆசைத் தம்பியிடம் நடந்தது குறித்து விசாரிக்க அவர் வீட்டுக்கு சென்றோம். வீடு பூட்டி இருந்ததால் அருகே உள்ள வீட்டினரிடம் விசாரித்தோம். "சரவணன் ஜாதியைக் காட்டி கொடுத்துவிட்டான். அவ்வளவுதான் கூற முடியும்" என்று முடித்துக் கொண்டனர்.

தொடர்ந்து நாம் தி.மு.க. தேர்தல் குழு செயலாளர் டி.எம். செல்வகணபதி எங்கு முகாமிட்டிருக்கிறார் என்று விசாரித்ததில் அவர் ஏரியூர் அருகே ஜங்கம்பட்டியில் உள்ளதாக தகவல் வர, நாம் அங்கே வண்டியை விரட்டினோம். அங்கே ஒரு குடிசை வீட்டின் முன் ஏராளமான வண்டிகள் நிறுத்தப்பட்டிருக்க, அங்கே தான் டி.எம். செல்வகணபதி உடன்பிறப்புகளுடன் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார். நாம் ஜன்னல் வழியாக கேமராவை நுழைத்து ஒரு படத்தை க்ளிக்குக் கொண்டு, காதைக் கூர்மையாக்கி பேசுவதைக் கேட்டோம். டி.எம்.எஸ். அங்கிருந்த இளைஞர்களிடம், "நாம் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும். வெற்றி என்றால் மிகப் பெரிய வெற்றி. உங்களுடைய குறிக்கோள் அதுவாகத்தான் இருக்க வேண்டும். உங்கள் குறிக்கோளை அடக்க இதுபோல பல தகராறு, கலாட்டா செய்வார்கள். அதை நீங்கள் கண்டு கொள்ளக்கூடாது. அவர்களிடம் மல்லுக்கும் நிற்கக் கூடாது. உங்கள் முழுத் திறமையும் வாக்காளர்களை அழைத்து வந்து நமக்கு வாக்களிக்க வைப்பதில்தான் இருக்க வேண்டும். உங்கள் ஊரில் உள்ள சொந்தக்காரர்களிடம் நன்றாகப் பேசுங்கள். 'அநீதிக்கு, ஜாதி என்ற போர்வையில் துணை போகாதீர்கள்' என்று எடுத்து கூறுங்கள். ஜாதிக்காக அவர்கள் என்ன செய்தார்கள் என்றும், கல்வியில் வன்னியருக்கு முன்னேற்றம் தந்தனரா? என்றும் கூறி மக்களிடம் ஜாதி இல்லை என்ற விழிப்புணர்வைக் கொண்டு வாருங்கள்" என்றும் பேசிக் கொண்டே இருந்தார். நாம் மெல்ல அந்த இடத்தை விட்டு நகர்ந்தோம்.

●